


# 27.10.2026 செய்திகள்

## 100% எத்தனாலில் இயங்கும் வாகனங்களுக்கு அனுமதி

- 85 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் முதல் 100 சதவீத எத்தனால் (தூய எத்தனால்) வரை பயன்படுத்தி இயங்கும் வகையிலான வாகனங்களை அனுமதிக்கும் வகையில், மத்திய மோட்டார் வாகன விதிகளில் தி ருத்தங்களை மத்திய அரசு மேற்கொண்டுள்ளது.

- நாட்டில் பெட்ரோல், டீசல் பயன்பாட்டுக்கு இறக்குமதி கச்சா எண்ணெய்யை சார்ந்திருக்கும் நிலையைக் குறைக்கும் நோக்கில், எத்தனால் கலந்த பெட்ரோல் விநியோகத்தை மத்திய அரசு ஊக்குவித்து வருகிறது.

- பெட்ரோலில் எத்தனால் கலப்பு படிப்படியாக உயர்த்தப்பட்டு, தற்போது நாடு முழுவதும் 20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோல் (இ20) பெரும்பாலும் விநியோகிக்கப்படுகிறது.

- இந்த நிலையில், 85 சதவீதம் எத்தனால் (இ85) கலந்த பெட்ரோல் (85% எத்தனால், 15% பெட்ரோல்) மற்றும் 100 சதவீதம் எத்தனாலில் இயங்கும் (எரிபொருள் நெகிழ்வு வாகனங்கள்) வாகனங்கள் மற்றும் பி.100 பயோ-டீசல், ஹைட்ரஜன்-சிஎன்ஜி கலவை உள்ளிட்டவற்றில் இயங்கும் வாகனங்களை அனுமதிக்க மத்திய அரசு முடிவு செய்துள்ளது.